# தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் (ஐ.இ)
# Tamil Catholic Association (UK)

**PO BOX 1073 Wembley HA0 9JD**

Patron: His Lordship Rt. Revd. Dr. Justin Bernard Gnanapragasam
Bishop of Jaffna

Chairperson
**Mr Roche Nicholas Xavier**
+44(0)7502329370

Secretary
**Mrs Mary Francisca Francis**
+44(0)7949226291

Treasurer
**Mr Emmanuel Bastiampillai**
+44(0)7814105355

www.tca-uk.org tcauk@hotmail.co.uk UK Tamil Catholic Association

Registered Charity Number: 1124627


26.04.2024

தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்.2024.

மேற்கூறிய ஒன்றியத்தின் பொதுக்கூட்டமும்,2024-2026 ஆண்டிற்கான புதிய நிர்வாக சபைக்கான உறுப்பினர்கள் தெரிவும் வைகாசி மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு Parish Room,All Saints Church,Kenton,Middx,HA3 0UL என்ற இடத்தில் நடைபெற உள்ளது .இதில் அங்கத்தவர்கள் யாவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஒன்றியத்தின் சார்பில் தாழ்மையுடன் அழைக்கிறேன். ஒன்றியத்தின் புதிய நிர்வாக சபையில் சேவையாற்ற விரும்புவோருக்கான மனுப்பத்திரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. புதிய நிர்வாக குழுவில் சேவையாற்ற விரும்பும் அங்கத்தவர்கள், ஒன்றியத்தின் மற்றுமொரு அங்கத்தவர் மூலம் நியமனப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து இருவரும் கையொப்பமிட்டு 12.05.2024ம் திகதிக்கு முன்பாக எனக்குக் கிடைக்க கூடியதாக தபால் அல்லது மினஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும். 12.05.2024ட்கு பின்பு கிடைக்கும் நியமனப்ப த்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதை கவனத்தில் எடுத்துக்கொள்ளவும். புதிய நிர்வாக சபைக்கு ஆகக்கூடுதலாக 11 அங்கத்தவர்கள் மட்டுமே பணியாற்ற இணைத்துக் கொள்ளப் படுவார். நியமனப்பத்திரங்கள் எனக்கு கிடைத்தது பற்றி தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

இக்கூட்டித்திற்கான நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு:

1. தொடக்க செபமும்,தலைவரின வரவேற்புரையும்.
2. செயலாளர் அறிக்கை.
3. பொருளாளரின் அறிக்கை.
4. சபையின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டிய முன்னறிவிக்கப்பட பிரேரணைகள் ( ஏதாவது இருப்பின்)
5. ஏனைய விடயங்கள்.
6. ஒன்றியத்தின் கடந்த இரண்டு வருடகால (2022-2024) வளர்ச்சி பற்றி தலைவரின சுருக்கமான உரை.
7. புதிய நிர்வாக சபைக்கான உறுப்பினர்கள் தெரிவும்,கணக்காய்வாளர் நியமனமும்.
8. புதிய தலைவரின் உரையும், அறிவிப்புகளும் .
9. இறுதி ச் செபம்.

தவிக்க முடியாத காரணங்களால் இக் கூட்டத்திட்கு வர முடியாதவர்கள், மேலே தரப்பட்டுள்ள எனது மின்னஞ்சல் அல்லது தொலைபேசி இலக்கத்தின் மூலம் எனக்கு அறிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலதிக விபரங்களை எமது இணையத்தளத்திலும் www.tca-uk.org பார்வையிடலாம். உங்கள் ஒத்துழைப்பிற்கும், ஆதரவிற்கும் ஒன்றியத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

திருமதி பிரான்சிஸ்கா பிரான்சிஸ்.

செயலாளர்.

தமிழ் கத்தோலிக்க ஒன்றியம்(ஐ. இ)